செ.வெ.எண்:07 நாள்:04.10.2024

**கெலமங்கலம் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.ராமச்சந்திரன் (தளி) ஆகியோர் முன்னிலையில் இன்று (04.10.2024) குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் அரசு பல்தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.ராமச்சந்திரன் (தளி) ஆகியோர் முன்னிலையில் இன்று (04.10.2024) குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பிற்படுத்தப்பட்டோர் நலத்தறையின் மூலம் அரசாணை (நிலை) எண்.64. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:13.08.2024-ன்படி கெலமங்கலம், பல்தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் கல்லூரிக்கு சொந்தமான இடத்தில் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி புதியதாக துவங்க உத்தரவிடப்பட்டது. இந்த மாணவர் விடுதி மாணவர்கள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் ஆகியோர்களின் கோரிக்கை ஏற்று மாவட்ட நிர்வாகம் சார்பாக அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தருமபுரியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் இவ்விடுதி துவக்கப்படும் என அறிவிப்பினை தொடர்ந்து, தற்போது கெலமங்கலம் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதிக்கட்டிடம் இன்று (04.10.2024) மாணவர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் தங்குவதற்கு ஏற்கனவே 46 விடுதிகள் செயல்பட்டு வருகிறது. இவ்விடுதிகளில் 3071 மாணவ, மாணவிகள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். தற்போது கூடுதலாக கெலமங்கலம் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரியில் துவக்கப்பட்டுள்ள மாணவர் விடுதியில் 100 மாணவர்கள் தங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவாக சேமியா கிச்சடி, தக்காளி சட்டினி, சாம்பார், பூரி மசால், இட்லி, சாம்பார், சட்டினி, பொங்கல், வரகு பொங்கல், திணை அரிசி பொங்கல், கத்திரிக்காய் கொத்து, வடை, ரவை கிச்சடி, தேங்காய் சட்னி, தோசை (அ) நவதானிய தோசை ஆகியவை வழங்கப்படுகிறது.

மதிய உணவாக சாதம், சாம்பார், இருவகை பொரியல், ரசம், மோர், முட்டை, காய்கறி பிரியாணி, காய்கறி குருமா, மட்டன்/சிக்கன் குருமா (அ) குழம்பு, கூட்டு, தக்காளி சாதம், லெமன் சாதம், தயிர் சாதம், உருளை கிழங்கு பொரியல், காரக்குழம்பு, புதினா சாதம், கேரட் சாதம், கறிவேப்பிலை சாதம், பருப்பு துவையல், அப்பளம் ஆகியவை வழங்கப்படுகிறது. மாலை நேரங்களில் சுண்டல், சுக்குமல்லி காபி, தேநீர் ஆகியவை வழங்கப்படுகிறது.

இரவு உணவாக சப்பாத்தி, குருமா, இட்லி, சாம்பார், சட்னி, காய்கறி புலாவ், குருமா / ரைத்தா, ஊத்தாப்பம், கோதுமை தோசை, தக்காளி சட்டினி, பொரியல், ரசம், சாம்பார் சாதம், தக்காளி சாதம் மற்றும் வறுவல் ஆகியவை வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைகளில் பள்ளி விடுதிகளில் ஆட்டிறைச்சி 80 கிராம், கோழி இறைச்சி 100 கிராமும், கல்லூரி விடுதிகளில் ஆட்டிறைச்சி 80 கிராம், கோழி இறைச்சி 120 கிராம் வழங்கப்படுகிறது. வாரத்தில் 5 நாட்கள் முட்டைகள் வழங்கப்படுகிறது. முட்டை சாப்பிடாத மாணவ, மாணவிகளுக்கு 1 வாழைப்பழம் வழங்கப்படுகிறது.

மேலும், மாணவர்களுக்கு விடுதியில் அடிப்படை வசதிகளான மின் விசிறி, படுக்கை வசதி, கழிப்பறை வசதி, சுகாதாரமான குடிநீர் மற்றும் சுகாதாரமான சமையலறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடுதி அஞ்செட்டி, தளி, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட மலைக்கிராம மாணவர்கள் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்விடுதியில் பயிலும் மாணவர்கள் நல்ல முறையில் தொழில்கல்வி கற்று வேலைவாய்ப்பில் சேர்ந்து, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.மணிமேகலை நாகராஜ், கெலமங்கலம் ஒன்றிய குழு தலைவர் திரு.கேசவமூர்த்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி.பத்மலதா, வட்டாட்சியர்கள் திரு.கோகுல்நாத், திரு.மோகன்தாஸ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சாந்தி, திரு.சதீஸ்பாபு, கல்லூரி முதல்வர் திரு.கோவிந்தராஜ், துணை முதல்வர் திருமதி.சாந்தி மீனா, விடுதி காப்பாளர் திரு.வீரப்பன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி**